## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு – 2016

---

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2016 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டின் போது கணனி மற்றும் அலுவலக உபகரணங்கள் மாத்திரம் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமானத்தேய்வு முடிவடைந்திருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 32,721,378 ஆகும். 2015/2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் அகற்றுவதற்காக இனங்காணப்பட்டிருந்த சொத்துக்களை அகற்றி ஏனைய சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 இன் 20 ஆம் இலக்க மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் 46 ஆவது பிரிவு மற்றும் அனுமதிப்பத்திர உடமையாளர்களுக்கு வழங்கப்பட்ட மின் உற்பத்தி அனுமதிப்பத்திர நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டிய வருடாந்தம் தீர்மானிக்கப்பட்ட வாடகையாக 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மின்சார சபையிலிருந்து ரூபா 81,852,700 மற்றும் வரித்தொகையையும் 2013 ஆம் ஆண்டிலிருந்து மற்றும் 2016 ஆம் ஆண்டு வரை ஏனைய நிறுவனங்களிலிருந்து ரூபா 215,240 தொகை 2017 யூன் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உராய்வு எண்ணெய் விற்பனை செய்யும் கம்பனிகளிலிருந்து அறவிடப்படுகின்ற அரையாண்டு மாறும் பதிவு செய்தல் கட்டணங்களுக்குரிய காலப்பகுதி முடிவடைந்து 30 நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்குச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி 06 மாதங்களுக்குரியதாக இரண்டு விற்பனைக் கம்பனிகளிலிருந்து கிடைக்கவேண்டிய மதிப்பீட்டுக் கட்டணம் ரூபா 1,562,263 தொகை 2017 யூன் மாதம் வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் அதில் ஒரு கம்பனியிலிருந்து சில வருடங்களுக்கு முன்பிலிருந்து இன்னும் கிடைக்க வேண்டிய ரூபா 1,134,698 மீதியும் காணப்பட்டது.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371(2)(இ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைபெற்றதும் உடன்படிக்கைத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டில் தெற்காசிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒழுங்குபடுத்தும் பிரிவின் நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செலுத்தப்பட்ட ரூபா 55,000 முற்பணத்தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டிகள் | 2016 ஆம் ஆண்டிற்காக விரிவான பெறுகைகள் திட்டமும் பெறுகை நேர அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,082,655 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 4,048,768 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,131,423 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மாறும் பதிவு செய்தல் கட்டண வருமானம் ரூபா 6,158,948 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஆளணி சம்பளச் செலவினம் ரூபா 8,101,684 இனாலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 6,722,483 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை மிகையொன்று காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் மிகை 84 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டில் 176 சதவீதத்தால் குறைவடைந்து பற்றாக்குறைக்கு உள்ளாகியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கும் போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 92,491,830 தொகையான பங்களிப்பு பல்வேறு தளம்பல்களுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 98,274,006 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் (14) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ஆணைக்குழுவின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தது.

- ❖ சகல நுகர்வோர்களினதும் உரிமையைப் பாதுகாத்தலும் போட்டித் தன்மையை மேம்படுத்தலும்.

❖ மின்சக்தி, நீர்ச் சேவை மற்றும் கனிய எண்ணெய் போன்ற பொதுப் பயன்பாட்டுக் கைத்தொழில்களின் செயற்படு நிலை மற்றும் மூலதன முதலீடு என்ற இரண்டினதும் செயற்திறனை மேம்படுத்துதல், அவற்றின் பாதுகாப்பு நிலை மற்றும் சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவற்றிற்கு வளங்களை செயற்திறனாக ஒதுக்கீடு செய்வதை மேம்படுத்துதல்.

❖ இயலுமான சந்தர்ப்பங்களின் போது சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக பயன்பாட்டுச் சேவை ‘‘பென்ச்மார்க்’’ செய்தல் மற்றும் செயற்திறனாக அமுல்படுத்துகின்ற விலை கட்டுப்பாடு நிறுவனங்களுக்கு அவர்களின் பொதுப் பயன்பாட்டு கைத்தொழில்களுக்காக நிதி வழங்கும் போது முறைகேடான கஷ்டங்களுக்கு முகங்கொடுக்காத வகையில் கண்காணித்தல்

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பயன்பாட்டுக் கைத்தொழிலாக காண்பிக்கப்பட்ட மின்சாரம், நீர் மற்றும் கனிய எண்ணெய் போன்ற கைத்தொழில்களுக்குரிய ஒழுங்குபடுத்துதல் நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், கனிய எண்ணெய் மற்றும் நீருடன் தொடர்புடைய கைத்தொழில்களுக்கு ஆணைக்குழுவின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சட்டரீதியான நிதிஏற்பாடுகள் உரிய நிறுவனத்தின் மூலம் இது வரையிலும் அக் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் அதிகாரச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் ஆணைக்குழுவின் சேவை மின்சக்தி கைத்தொழிலுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் நீர் மற்றும் கனிய எண்ணெய் கைத்தொழில்களுக்கு உரிய சேவையினை வழங்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அது தடையாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,300,000 பெறுமதியான இரண்டு செயற்பாடுகளுக்காக ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்காமையின் காரணமாக அந்த செயற்பாடுகளை அமுல்படுத்த முடியாதிருந்தது.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(டீ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் புதிய பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பு திருத்தப்பட்டு அது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்கூறப்பட்ட (அ) இல் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகள் தொடர்பான திட்டத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடிடப்பட்ட செலவினங்களை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 05 விடயங்களில் 21 சதவீதம் முதல் 42 சதவீதம் வரை மிகை நிதிஏற்பாடு காணப்பட்டமையால் முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பாதீட்டைப் பயன்படுத்துதல் குறைபாட்டுடன் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினரின் நிறுவனக் கட்டமைப்பிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஒழுங்குபடுத்துதல் கட்டணம் என்பன அறவிடல் செயற்திறனாக இல்லாமை. |